[திரு. கே. அ. மதியழகன்] [9th March 1963

கள். செக்கோஸ்லாவிகியா நாட்டு அனுபவத்தின் அடிப்படையில் கமிட்டி தயாரித்த அறிக்கையும் இந்தச் சர்க்காரின் அலமாரியில் தூங்கிக்கொண்டிருக்கிறது. அது எப்போது வெளியேவரும் ?

சென்னை நகருக்கு மாஸ்டர் ப்ளான் ஒன்று போட்டுக் கொடுத்தார்கள். தனிப்பட்டமுறையில் கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டபோது, "புதிதாக அமெரிக்க நிபுணர்களைக் கலந்தாலோசித்து மாஸ்டர் ப்ளான் தயார் செய்துகொடிண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். இப்படி ப்ளான் போடுகிறோம், கமிட்டிகள் போட்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறதே தவிர, அந்தக் கமிட்டிகள் ரிபோர்ட் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. காவிரி நதித்தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவருவது பற்றி இன்வெஸ்டிகேட் செய்வதற்காக ஒரு கமிட்டி போட்டோம். அது என்ன ஆயிற்று ? கேட்கும் நேரத்தில், "கமிட்டி போடுகிறோம், ஆராய்ச்சியில் இருக்கிறது" என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறதே தவிர, இந்த மாநிலத்தின் தலைநகரத்தைப் பொறுத்தவரையில் நிறைவேறுது இருக்கும்பெரும் காரியங்கள்,ஏதோகண்துடைப்பாக,காலத்தைத் தாழ்த்தும் காரியங்களாக அமைகின்றனவே அல்லாமல், கூவம் ரிவர் இம்ப்ருவ்மென்ட் ஹை பவர் கமிட்டி, ஸுவேஜ் யுடிலைசேஷன் கமிட்டி, காவரி வாட்டர் இன்வெஸ்டிகேஷன் கமிட்டி இவைகளைப்பற்றிய விவரங்களைப்பற்றித் என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள் என்பதுபற்றி தயவுசெய்து அமைச்சர் அவர்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலைப் போக்கவும், விறகு பஞ்சத்தைப் போக்கவும் நல்ல வாய்ப்பும் வழியும் இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

என்னுடைய வெட்டுப் பிரேரணையில், ஐந்து பார்லிமெண்டரி தொகுதி குரிய இடங்களை எழு அசெம்பிளி தொகுதிகளாக அமைக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். இது சர்க்காருடைய கருத்துக்கு விரோதமானதல்ல. ஆந்திரமாநிலம் போன்ற மற்ற மாநிலங்களில் அப்படி மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தமாநில சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகை அதிகரிக்கப்படவேண்டும். அதற்கான காரணங்களை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். தொகுதி மக்களிடம் நேரடித்தொடர்பிற்கும் சீரானபணிக்கும் மக்கள் குரலை சீரிய வகையில் பிரதிபலிபதற்கும் எண்ணிக்கை அதிகமாகவேண்டும். இங்கிலாந்து போன்ற நாடுகளில் கூட, ஐம்பதாயிரம், அறுபதாயிரம் வாக்காளர்கள் உள்ள ஒரு தொகுதிக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இருக்கிறது. ஒரு பார்லிமென்டரி தொகுதிக்கு எழு அசெம்பிளி தொகுதிகள் இருக்கவேண்டும் என்று கோருகிற என்னுடைய கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுகொண்டு, அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளிப்பாரானால், நான் என்னுடைய வெட்டு பிரேரணையை வற்புறுத்தாமல் அதனைத் திருப்பிபெறக் காத்திருக்கிறேன் என்று கூறி என்னுடைய உரையை முடித்துகின்றேன்.

* **திரு. மு. கருணாநிதி :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க நான் கடமைபட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள், "மானிலச் சட்டப்பேரவை, தேர்தல்கள் மானிலத் தலைவர், அமைச்சர்கள்; தலைமையிடப் பணியாளர், ஒய்வு உபகாரத் தொகைகள்" ஆகிய நான்கு பகுதிகளில் கோரப்படுகிற மானியக் கோரிக்கைகள் ஆகும். சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தில், "சட்டப்பேரவை" என்ற மானியத்தின் மீது தனியாகவும், மற்ற மூன்று பகுதிகள் மீது தனியாகவும் எடுத்துக்கொண்டு விவாதம் நடைபெற்றது. அந்தக் காரணத்தினால் சட்டமன்ற மானியத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் நல்லதொரு அமைதியான சூழ்நிலையும், சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தோடு தங்கள் தங்களுடைய எண்ணத்தை எடுத்துத் தெரிவிக்கக்கூடிய சுமுகமான நிலைமையும் சென்ற ஆண்டு விவாதத்தில் ஒளிவிடக் கண்டோம் ஆனால், இந்த ஆண்டு, சரியாகவோ தவருகவோ, விரும்பாத காரணத்

9th March 1963] [திரு. மு. கருணாநிதி]

தாலோ அல்லது நினைக்காத காரணத்தாலோ அல்லது அந்தக் கருத்தை யாரும் வெளியிடாத காரணத்தாலோ இந்த நான்கு மானியக் கோரிக்கைகளும் ஒன்றாக இணைந்துவிட்ட காரணத்தால், இந்த மானியக் கோரிக்கையின் விவாதத்தில் இதுவரையில் இல்லாத சூடும் சுவைக்குறைவும், சுருதி பேதமும் ஏற்படுவதற்காக நான் மிக மிக வருந்துகிறேன்.

இந்தச் சட்ட மன்றம் நல்ல பாரம்பரியத்தைப் பெற்று வளர்ந்து வருகிற ஒரு சட்ட மன்றம் ஆகும். இந்த சட்டமன்றத்தினுடைய தலைவர்களாக இது வரையில் வீற்றிருந்தவர்கள் எல்லாம், இந்த மன்றத்தினுடைய பெருமையை மிகவும் சிறப்பாகக் காப்பாற்றக்கூடிய அளவிலும், நல்ல கனிவு காட்டியும், கருணை மழை பொழிந்தும், கட்சி வேறுபாடு 12-00 noon. இல்லாமலும், மறைமுகமாகக்கூட கட்சி எண்ணத்தை மனதிலே கொள்ளாத நிலையில் இந்த மாமன்ற நடவடிக்கைகளை நடத்திச் சென்றிருக்கிறார்கள். அவ்வழியிலே, சென்ற ஆண்டு தொடங்கி இதுவரையிலும். இந்த மாமன்றத்தை, சட்ட மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிற தாங்கள் மிகத் திறமையோடு நடத்தி வருகின்றீர்கள். சட்ட மன்றத்தின் நடவடிக்கைகளில் சூடு பிறக்கின்ற நேரத்தில் தணித்தும், சுருதி பேதம் ஏற்படுகிற நேரத்தில் அதை நிறைவு செய்தும், இந்த மன்றத்தை நடத்திச் செல்கிற தங்களுக்கும், தங்களுக்கு உறுதுணையாக இருக்கும் மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எங்களுடைய கட்சியின் சார்பாக மீண்டும் மீண்டும் நன்றியையும் வணக்கத்தையும் நாங்கள் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

விவாதங்கள்—அது வரவு செலவுத் திட்டத்தின் மீதுள்ள விவாதமாக இருந்தாலும், வேறு சில சட்டங்கள் நிறைவேற்றப்படும் விவாதமாக இருந்தாலும் —நல்ல முறையில் நடைபெறுகின்றன. நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு இறுதியில் உரையாற்றிய நேரத்தில், நேற்றை தினம் நம்முடைய மதிப்புக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் பேசும் போது எதிர்கட்சி எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்பதையும் எந்த அளவுக்குத் திறமையோடு இயங்குகிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலவே இன்றைய தினம் இந்த மானியத்தின் மீது பேசிய ஈரோட்டை சேர்ந்த [illegible] காங்கிரசு உறுப்பினர் ஒருவர், எதிர்கட்சியினுடைய திறமைகளை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்கள். ஈரோட்டிலிருந்து எங்களுக்குப் பாராட்டுக் கிடைக்கிறது என்றாலே அதற்குத் தனி மகிழ்ச்சி உண்டு. அது கிடைக்கவேண்டிய இடத்திலிருந்து கிடைக்காமற்போனாலும், கிடைக்குமா என்று சந்தேகப்பட்ட இடத்திலிருந்து கிடைக்கிறது என்பதற்காக நாங்கள் மிக மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மாமன்றத்தில் நம் சட்டமன்ற மானியத்தைப் பற்றி இங்கு பேசுகிற நேரத்தில் குறிப்பிட வேண்டியது மிகமிக முக்கியமாக ஒன்று உண்டு. இந்தச் சட்ட மன்றத்தில் சில நேரங்களில் சூடு அதிகமாகி விவாதங்கள் நடைபெற்றன என்று நான் குறிப்பிட்டேன் அவைகளில் முக்கியமாக, இந்த மன்றத்திற்குச் சம்பந்தப்படாதவர்கள் வெளியிலே இருப்பவர்களுடைய பெயர்கள் அடிக்கடி இங்கு இழுக்கப்பட்டன. அந்தப் பெயர்கள் சொல்லப்படாவிட்டாலும், 'இவரைத்தான் குறிப்பிட்டுஇருப்பார்கள்' என்று வெளியே இருப்பவர்கள் பத்திரிகை நிருபர்கள், தாங்களாகவே கற்பனை செய்து, பெயரைக்கூடப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். நேற்றயதினம் நிதி அமைச்சர் அவர்கள், ' வெளியிலே இருக்கிற ஒரு பெரியவர் ' என்று குறிப்பிட்டார்கள். ஆனால், பத்திரிகயில் ' எந்த பெரியவரை இவர் குறிப்பிட்டார் ' என்று பெயர் பொறித்து, தலைப்புச் செய்திகள் வந்திருக்கின்றன.

ஆகவே இந்த மன்றத்தில் பேசுகிற நேரத்தில் மன்றத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் மிகவும் அமைதியுடனும், எச்சரிக்கையுடனும் குறிப்பிடவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெரியவருக்காக நாங்கள் வக்காலத்து வாங்குகிறோம் என்றோ, அவர்களின் கொள்கையும் எங்கள் கொள்கையும் ஒன்றாகக் கலந்துவிட்டது என்றோ யாரும் தயவு செய்து கற்பனை செய்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் திரு. ராஜகோபாலச்சாரியார்

படம் அழகாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த படத்தின் கீழே தன் இருதயத்திலும், அறிவிலும் மகத்தானவர் என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெரியவரைச் சிறைச்சாலையில் தள்ள வேண்டு மென்று சொல்லுகிற அளவு இந்த மன்றத்தில் பேசப்படுவது மிகவும் வருந்தத்ததக்கதாகும். இத்தகைய நிலை விவாதத்தில் நீடிக்குமானால் இந்த மன்றம் தன்னுடைய பழம் பெருமையையெல்லாம் இழந்துவிடக்கூடுமோ என்ற அச்சத்தினால் நான் இதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தாங்கள் அருள் கூர்ந்து, மனம் விரும்பி அத்தகைய சொற்களைச் சட்டமன்ற நடவடிக்கை எடுகளில் இருந்து எடுப்பதற்கு முயற்சி செய்வீர்களானால் நான் பெரிதும் நன்றி தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாக சட்டமன்ற விவாதங்களில் நல்ல கண்ணியத்தை வளர்க்க வேண்டுமென்பதற்காகவே நான் இதை இங்கே எடுத்துக் காட்டுகிறேனேயொழிய, நம்முடைய பெருமைமிக்க பழைய மரபு, பண்பாட்டை ஒட்டி சட்டசபை நடவடிக்கைகள் செல்லவேண்டுமென்ற ஆசையின் காரணமாக இக்கருத்தை வெளியிடுகிறேனே தவிர வேறு இல்லை. இதன் காரணமாக சுதந்திரக் கட்சியோடு திராவிட முன்னேற்றக் கழகம் இணைந்துவிட்டது என்றோ, இரு வேறு கட்சிகள் ஒன்றாக இணைந்துவிட்டது என்றோ யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. சீன வெறியர்கள் இந்த நாட்டைத் தாக்குவதற்கு வட எல்லையில் கால் வைத்தவுடனே திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய சர்க்காரோடு இத்தாக்குதலை முறியடிப்பதற்கு எல்லாவகையிலும் ஒத்துழைப்பது என்று முடிவு செய்தது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசோடு இணைந்துவிட்டது என்று சொன்னவர்கள் உண்டு. நல்ல வேளையாக அப்படிப்பட்ட எண்ணம் நிலைபெற்றுவிடாத அளவுக்கு இந்தச் சட்டமன்றத்தில் நடந்த விவாதங்கள் இரண்டையும் வேறுபடுத்தியே காட்டும் அளவில் அமைந்ததற்கு நான் ஓரளவு பெருமைப்படுகிறேன். சீன வெறியர்கள் நாட்டைத் தாக்குவதற்கு முனைந்த போது முழு மூச்சுடன் அத்தாக்குதலை முறியடிக்கவேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தன் ஒத்துழைப்பை இந்திய சர்க்காருக்கு அளிக்க முன்வந்ததே தவிர காங்கிரஸ் கட்சிக்கு அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கின்ற ஆதரவு ஆளும் கட்சிக்கு அல்ல, நாட்டை ஆளும் அரசாங்கத்திற்கே ஆகும். இன்றையதினம் எதிர்கட்சிகளுக்கும் ஆளும்கட்சிக்குமே பலவகையில் அபிப்பிராயபேதம் இருந்தாலும் கூட பொது எதிரியான சீனர்களை எதிர்ப்பதற்கு சர்க்காரின் கை ஒருமுகமாக வலுப்பட வேண்டும் என்பதற்காக இந்த ஆதரவையும்,ஒத்துழைப்பையும் நல்க முன்வந்திருக்கிறோம். இன்றைக்கும்கூடப் பார்க்கலாம். பெரிய ஆலயங்களில் க்ளோபுகள் கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். அந்த க்ளோப் லஸ்தர் விளக்குகளைப் பார்த்தால் அந்த விளக்குகளுக்குள் ஒரு கண்ணாடி டம்ளரைப் பொருத்தி அதில் பாதி எண்ணை, பாதி தண்ணீர் விட்டுத் திரியை போட்டு எரியவிடுவது தெரியும். சூடேறி க்ளாஸ் உடைந்துவிடக்கூடாது என்பதற்காக தண்ணீர் விடப்படுகிறது, மேலும் எண்ணை குறைவாகவிட்டாலும் போதும், தண்ணீரின் மேல் மிதப்பதனால் மேலாகவே எண்ணெயிருக்கும் என்ற காரணங்களுக்காகத் தண்ணீர் விடப்படுகிறது என்று சொன்னாலும் எண்ணையோடு தண்ணீர் கலந்தாலும் விளக்கு எரிகிறது. இருள் நீங்க அது பயன்படுகிறது. குறைவாக எண்ணை இருந்தாலும் அதை மேலாகக் கொண்டுவந்து நிறுத்தி விளக்கை எரித்து இருளைப் போக்கப்பயன்படுகிறது. இந்த அளவில் பார்த்தால் காங்கிரசை எண்ணெய் என்றோ, திராவிடமுன்னேற்றக் கழகத்தைத் தண்ணீர் என்றோ சொல்ல நான் முன்வரவில்லை. அதைப்பற்றி நாட்டம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்த இரண்டும் இணைவதனால் இன்றைய தினம் நம் நாட்டைச் சூழ்ந்து கொண்டிருக்கிற போராகிய மேகத்தின் கரிய இருளை நீக்கப் பயன்படும். ஆலயங்களில் விளங்கும் க்ளோப், லஸ்தர் விளக்குகளைப் போன்று விளங்குகிற சர்க்கார், எல்லா கட்சியின் ஆதரவையும் பெற்று செயலாக ஒளிவிட்டு பொது எதிரியாகிய சீனர் தொடுத்த யுத்த மேகத்தினால் நாட்டைச் சூழ்ந்துகொண்டிருக்கும் இருட்டை விரட்டுகிற முயற்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியின் சர்க்காரை ஆதரிக்க முன்வந்தது நாட்டிலே ஒரு பலம் பொருந்திய சுமுகமான நிலையை உண்டாக்கியிருக்கிற காட்சியைத்தான் காண்கிறோம்.

9th March 1963] [திரு. மு. கருணாநிதி]

இந்த நேரத்தில் இடைத் தேர்தல் வர இருக்கிறது என்ற அறிவிப்பை தின ஏடுகளில் காண்கிறோம். மத்திய சர்க்கார் நியமித்துள்ள இந்தக் குழுவானது விரைவில் இடைத்தேர்தலை நடத்தித் தீரவேண்டுமென்று அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அறிகிறோம். அதன்படி மூன்று நான்கு இடைத்தேர்தல்கள் வர இருக்கின்றன . இந்த இடைத்தேர்தல்கள் இப்போது அவசியம் தானா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இடைத் தேர்தலே வேண்டாம் என்ற எண்ணத்தில் நான் கூறவில்லை. முதல் அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துப்படி இந்த இடைத் தேர்தல் ஏற்பட்டுள்ள ஸ்தானங்களில் இருந்து சென்ற தடவை எந்த எந்த கட்சி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ அந்த அந்தக் கட்சியில் இருந்தே ஒருவரை நியமனம் செய்துவிடலாம் என்கிறயோசனை கவனம் செலுத்தப்படவேண்டிய ஒன்றுதான். கட்சிகளின் சார்பாகத் தேர்தெடுக்கப்பட்டு வந்துள்ள இடங்களுக்கு இம்மாதிரி சங்கடம் இல்லாமல் நியமனம் செய்துவிடலாம். ஆனால் சுயேச்சை அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தொகுதியாக இருந்தால் திரு. காமராஜ் அவர்களுடைய யோசனைப்படி யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற சங்கடம் எழக்கூடும் என்ற காரணத்தினால் எதிர் கட்சியிலுள்ள சிலரும் முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆயினும் இடைத்தேர்தல் வருகிறநேரம் எப்படிப்பட்டது ? நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிற காலத்தில், நெருக்கடி அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டு எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமை கட்டுப்படுத்தப்பட்டு வைத்திருக்கிற காலத்தில் இருக்கிற உரிமையையும்கூட பறித்து சிறையில் பிடித்துத் தள்ளி வைக்க வேண்டும் என்று கனம் மாதா கவுடர் பேசுகிற காலத்தில் இடைத் தேர்தலை நடத்தியே தான் தீருவது என்றால் ஒரு விஷயத்தைக்கவனித்துப்பார்க்க வேண்டும். இடைத் தேர்தலை நடத்துவது என்றால் அவசர நிலைமைப் பிரகடனத்தையாவது வாபஸ் பெறுங்கள். இல்லையென்றாலும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போடாமல் முன்பிருந்த பேச்சுரிமையையாவது வழங்கிவிட்டு இடைத் தேர்தலை நடத்துங்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். இல்லாதபட்சத்தில் வீணான கலவரங்களும், குழப்பமும்தான் நாட்டில் ஏற்பட இடமுண்டாகும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தனையில் தேக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இடைத்தேர்தல் நடத்தப்படுவதாக இருந்தால் பேச்சுரிமை வழங்கப்படவேண்டும். பேச்சுரிமையைக் கட்டுப்படுத்திவிட்டு இடைத்தேர்தலை நடத்துவது சரியல்ல. அப்படி நடத்துவதானது வீண் குழப்பங்களையும், இப்போது ஏற்பட்டிருக்கிற அமைதிக் குலைவையுமே ஏற்படுத்த ஏதுவாக இருக்கும். இன்றைக்கு ஊர்காவல் படை என்று அமைத்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் நாட்டைப் பாதுகாக்கவேண்டும் என்ற ஒரேசீரிய எண்ணத்தில் ஒன்றுபட்டிருக்கும் முயற்சியே ஊர்க்காவல் படை. இன்றையதினம் கட்சிப் பாகுபாடின்றி எல்லோரும் நமக்கெல்லாம் பொது எதிரியான சீனரை விரட்டியடிக்கவேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இடைத்தேர்தலைக் கொண்டுவந்து நிறுத்தினால் ஊர்க்காவல் படையினரும் அந்தக் கட்சி இந்தக் கட்சி என்று தேர்தலில் கலந்துகொள்ள இரண்டுபட வேண்டுமா ? இதைப்பற்றியெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக தமிழக மாநிலத்தைப் பொறுத்த வரையில் தேர்தல் தலைப்பில் கூறவேண்டுமென்றால் 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செல்லும் நிலைமை இருந்தது. இனி மக்கள் தொகை கணக்குப்படி 41–இல் இருந்து அது 38 ஆகக் குறைகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை மக்கள் தொகை கணக்கை வைத்து ஏற்படுகிறது. மக்கள் தொகை 51–ல் இருந்து 61–ஆம் ஆண்டு முடிய பார்க்கிற போது நம் ராஜ்யத்தில் மக்கள் தொகையின் பெருக்கம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. அஸ்ஸாம் மாகாணத்தில் 34.3 சதம் ஏற்றமும், பீகாரில் 19.75 சதம் ஏற்றமும், மத்தியப்பிரதேசத்தில் 24.25 சதம் ஏற்றமும், கேரளத்தில்

[திரு. மு. கருணாநிதி] [9th March 1963

24.55 சதம் ஏற்றமும், மேற்கு வங்கத்தில் 32.94 சதம் ஏற்றமும் ஏற்பட்டிருக்கிறபோது தமிழகத்தில் மட்டும் 11.73 சதம் ஏற்றம்தான் இருக்கிறது என்று கணக்கு காட்டுகிறது. மேற்கு வங்கத்திலும், அஸ்ஸாமிலும் மக்கள் தொகை அதிகமாகப் பெருகியிருக்கிறது என்பதை வெளியிடுகிற நேரத்தில் அங்கு சுரங்கத் தொழிலும், வேறு பல ஆலைத் தொழில்களும் எண்ணெய் சுரங்கங்களும் பெருகி யிருக்கிற காரணத்தினால் மக்கள் தொகை பெருகியிருக்கிறது என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் மக்கள் தொகை குறைந்திருப்பதற்குக் காரணம் புரியவில்லை, புதிராக இருக்கிறது என்று காரணம் கூறாமல் விடப்பட்டிருக்கிறது.

ஒருவேளை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மத்திய சர்க்காரின் உத்திரவுகளை ஒழுங்காக அமுல் நடத்தப்படுகிற முறையை மற்ற மாகாணங்களையெல்லாம்விட சிறப்பாகவும், ஒழுங்காகவும் கொண்டிருக்கிற இந்த மாநில சர்க்கார் அவ்விஷயத்திலும் அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றுகிற முறையில் மிகத் தீவிரமாக நடந்துகொண்டுவிட்டார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக மக்கள் தொகை குறைந்துவிட்டதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. குறைந்துவிட்டது என்பதற்காகக் கவலைப்படவில்லை. முனால் அது குறைந்ததனால் பார்லிமென்டில் நமக்குள்ள ஸ்தானம் 38 ஆகக் குறைந்துவிட்டதே என்பதுதான் கவலை. கனம் மதியழகன் குறிப்பிட்டது போல நமக்குள்ள எண்ணிக்கை குறைந்துவிடாதிருக்கவும், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகையை அதிகப்படுத்தவும், இப்போது நாம் அனுப்புவது 5 என்று இருப்பதை 7 என்று வது உயர்த்தவும் முயற்சி எடுத்துக்கொண்டாகவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படி ஆக்கப்படுமானால் இந்த மன்றத்திலே 266 உறுப்பினர்கள் இடம் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அதையும் இந்த அரசு மிகத் தீவிரமாகக் கவனிக்கவேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரை ஒரு சில உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்ற காரணத்தினாலோ, மாநகராட்சி மன்றத்திற்கு வரக் கூடிய சூழ்நிலை அவர்களுக்கு அமையாத காரணத்தினாலோ, திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த மூவரும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இருவரும், முஸ்லீம் லீகைச் சார்ந்த ஒருவரும், சுயேச்சை அங்கத்தினர் ஒருவரும், கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர் ஒருவரும், ஆக எட்டுப் பேர் தங்களுடைய பதவியை இழந்திருக்கிறார்கள். அப்படிப் பதவியிழந்தவர்களை மீண்டும் பதவியிலே அமரக் கூடாது என்று நீதிமன்றம் கட்டளையிட்டு விட்டது. அந்தக் கட்டளையைப் பற்றி நான் ஆராய விரும்பவில்லை ; தகாது. அந்த எட்டுப் பேர் இல்லாமலே மாநகராட்சி மன்றம் நடைபெறுவது சாத்தியமாகலாம். ஆனால் தங்கள் தொகுதிகளினுடைய உறுப்பினர்களைப் பெறாமல் இருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்களுடைய சிரமங்களை எண்ணிப் பார்த்து, இந்த அரசு ஒரு புதிய சட்டத்தின் மூலமாகவாவது அவர்களை மீண்டும் மாநகராட்சி மன்ற அங்கத்தினர்களாக இணைத்துக்கொள்ள வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, இங்கு பேசப்படுகிற விஷயங்களுக்கு மந்திரி பதில் சொல்வதோடு அமைந்துவிடாமல், மந்திரிகள் கூறுகின்ற உறுதிமொழிகள் எல்லாம் செயல் படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு முன்பு உறுப்பினராகப் பணியாற்றிய ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள், "இவைகளையெல்லாம் குறித்து வைத்துக் கொண்டு 'ஆகட்டும், பார்க்கலாம்' என்ற நிலைமையில் இருந்து விடாதீர்கள் ; கேள்விகளுக்கு இருக்கும் மதிப்புகூட விவாதங்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இங்கே பேசப்படுகின்ற கருத்துக்களைக் குறித்து அலுவலாளர்களைக் கொண்டு தக்க நடவடிக்கைகள் அவற்றின் பேரில் எடுக்க வேண்டும். ஆகவே, வந்தனம், உறுப்பினர்களுக்கு நன்றி, என்று சொல்லிப் பேச்சை முடித்துக் கொள்ளாதீர்கள்" என்று பல முறை இந்த மன்றத்திலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். விவாதங்களின்போது நல்ல

9th March 1963] [திரு. மு. கருணாநிதி]

உறுதி மொழிகளைத் தரும் அமைச்சர்கள், அந்த உறுதி மொழிகளை நல்லபடி செயல்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்றத்தின் பாரம்பரியத்திற்குத் தகுந்த முறையிலே, மிக நல்ல முறையிலே நம்முடைய சபாநாயகர் அவர்கள் சபையை நடத்தி வருவதைப் பார்க்கிறோம். நமது சபாநாயகர் அவர்கள், நேர்மையுள்ளவர், நீதியுள்ளவர் என்பதோடு கண்டிப்பும் உள்ளவர் என்றாலும், சட்டமன்ற அங்கத்தினர்களிடம் மிகவும் அன்புடன் நடந்து வருகிறார்கள் என்பதை எங்கள் காங்கிரஸ் கட்சியின் பக்கத்தில் இருந்தவர்கள் மட்டுமல்ல, எதிர்தரப்பில் உள்ளவர்களும் எடுத்துக் கூறியது காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்களுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் என் போன்றவர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறோம். தான் ஈன்ற சேயைத் தான் பாராட்டுவதைக் காட்டிலும் அடுத்தவர்கள் பாராட்டும்போது அகமகிழ்ச்சி அதிகமாக இருக்கும். உதவி சபாநாயகர் அவர்களும் கண்டிப்போடும், அதே சமயத்தில் அங்கத்தினர்களிடம் அன்போடு நடந்து கொள்கிறார்கள். தலைவரிடம் கண்டிப்பு இல்லாவிட்டால் அங்கத்தினர்கள் பேசுவதற்குக் காலம் எடுத்துக் கொள்வது கணக்கில்லாமல் போய்விடும். தலைவர் அவர்களின் கையிலே மிக நல்ல ஆயுதம் ஒன்று இருக்கிறது. அதுதான் மணியடிப்பது. அந்த மணி அடித்தவுடனே பேசிக் கொண்டிருப்பவர்களுடைய பேச்சின் தொடர்புகூட அற்றுப்போய் அப்படியே நிறுத்திவிடலாம் என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. வண்டி போகும் பாதை மாறிப் போனால் பள்ளத்தில் விழுந்துவிடும் என்ற காரணத்தால், உணர்ச்சி பொங்கிப்பேசும்போது வழி தவறக்கூடிய நிலைமை ஏற்பட்டால், உடனே நம்முடைய நிலைமையைப் பற்றிக் கவனமூட்டி, அவர்களும் நம்முடன் சேர்ந்து பங்கெடுத்துக் கொள்கிறார்கள். சபாநாயகர் அவர்களிடம் கண்டிப்பு இருந்தாலும்கூட, கண்டிப்புக்குப் பிறகு கருணை நிறைந்த பார்வையைப் பார்த்தவுடன், அந்தக் கண்டிப்பு மறந்துவிடுகிறது.

பெண் அங்கத்தினர்களைப் பற்றித் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தனை பெண் அங்கத்தினர்களும் இந்த மன்றத்திற்கு வராவிட்டாலும்கூட, தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் மட்டும் இந்தச் சபையிலே இருந்தால் அதிக மங்களகரமாக இருக்கும். திலகம் இட்டுக் கொள்ள நாங்கள் மறந்து விட்டாலுங்கூட, அவர்கள் நெற்றியிலிருந்து டன் கணக்கில் நாங்கள் எடுத்துக்கொள்ளலாம். அவர்கள், பெண்களைக் கண்டு பயந்ததுபோல் பேசினார்கள். "துப்பாக்கியைக் கையில் கொடுத்துவிட்டால் இந்தப் பெண்கள் என்னதான் செய்வார்களோ" என்று கூறினார்கள். எங்கள் கையில் இருக்கிற 'ஹாண்ட்பாக்' கைக் கொண்டே துப்பாக்கியைவிட அதிக வேலை செய்ய முடியும். அந்தத் துணிச்சல் இந்த நாட்டுப் பெண்களுக்கு உண்டு. இந்த நாட்டுப் பெண்கள் கட்டுப்பாட்டுடனும் கடமையுணர்ச்சியுடனும் நடந்து கொள்வார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் அரசியல் கண்ணியம் மிக்கவர், கண்ணியமாகப் பேசக்கூடியவர், நடந்து கொள்ளக் கூடியவர். உப தலைவர் அவர்களும் உவமானம், உவமேயத்தோடு கவர்ச்சிகரமாகப் பேசக்கூடியவர். சுதந்திரக் கட்சி தலைவர் அவர்கள் பேசுகின்ற கருத்துக்கள் காட்டமான கருத்துக்களாக இருப்பினும், அவர்கள் பேசுகின்ற இன்பத் தமிழிலே அத்தனையையும் மறந்து விடுகிறோம்.

கனம் மணி அவர்கள் பேசும்போது, "நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது முதலமைச்சர் அவர்கள் பேசினால் எங்களுக்கு அச்சமாக இருக்கிறது, என்ன பேசுகிறார் என்று புரியவில்லை" என்று சொன்னார்.

**கனம் சபாநாயகர் :** சத்தம் அதிகமாக இருக்கிறதே—பார்வையாளர்கள் மாடத்திலிருந்து சத்தம் வருவதாக இருந்தால், பார்வையாளர்கள் எல்லோரும் வெளியே போகவேண்டியிருக்கும்.